> வேதனை வழி மீட்பு கொண்டு வருவதில், கிறிஸ்து மீட்படையும் நிலைக்கு மனித வேதனையை உயர்த்தினார். எனவே வேதனையுறும் ஒவ்வொரு மனிதனும்,கிறிஸ்துவின் மீட்பில் பங்காளியாகின்றான்.
>
> - புனித 2ம் ஜோன் பவுல்

இந்த ஞாயிற்றுக்கிழமை முதல் வாசகத்தில், பேதுரு மிகவும் தைரியமான, தன்னம்பிக்கையான மனிதனாக காட்டப்படுகிறது. கூட்டத்திற்கு முன் நின்று, தானும் சீடர்களும் இயேசுவோடு இருந்ததையும் அவரது செயல்களை கண்கூடாக பார்த்ததையும் அறிவிக்கின்றார். மரணத்திற்கு இயேசு எவ்வாறு கையளிக்கப்பட்டார் என்பதையும் மரணத்திலிருந்து கடவுள் அவரை உயர்த்தினார் என்பதையும் அவர்களுக்கு நினைவுப்படுத்துகிறார். இப்போது, இயேசுவின் சீடர்கள், அவரது கட்டளையை ஏற்று அவரது செய்தியை அறிவிக்கின்றனர்.

ஆயினும், நற்செய்தி வாசகத்தில், வேறொரு பேதுருவையும் பார்க்கிறோம். கல்லறையிலிருந்து இயேசுவின் உடல் அகற்றப்பட்டிருப்பதாக மகதலா மரியா தெரிவித்த போது, யோவானுடன் பேதுரு விரைந்தார். நுழைவாயிலை அடைந்த போது, தயங்கி நின்றார் யோவான். ஆனால் பேதுருவோ தனக்கேக்குரிய தைரியமான முந்திக்கொள்ளும் சுபாவத்தால், கல்லறைக்குள் நுழைந்தார். சுற்றிப் பார்த்தார். துணிகளையும் இயேசுவின் தலையை மூடியிருந்த துண்டையும் கண்டார். அதன் பின் யோவானும் சென்று பார்த்தார், விசுவசித்தார். "இயேசு இறந்து உயிர்த்தெழ வேண்டும் என்னும் மறைநூல் வாக்கை அவர்கள் அதுவரை புரிந்து கொள்ளவில்லை" (யோவான் 20:9). பேதுருவைப் பொறுத்த வரை, இது குறித்துக் கொண்டாடுவதற்கு ஒன்றுமில்லை என கருதப்படுகிறிது. அவர்கள் கண்ட காட்சியை இதர சீடர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டிய அவசியத்ததை பேதுரு உணர்ந்திருக்கவில்லை. அவரும் யோவானும் இல்லம் திரும்பினர்.

இந்த நிகழ்வுகள் வழி, பேதுருவின் இருப்பக்கத்தையும் காண முடிகிறது. கல்லறைக்குள் நுழைந்த பேதுருவும் எருசலத்தில் மக்கள் கூட்டத்தினரிடையே பேசிய பேதுருவும் ஒரே மனிதரல்ல. உயிர்த்த ஆண்டவரைச் சந்தித்தப் பின், கிறிஸ்துவில் துணிவும் தன்னம்பிக்கையும் கொண்டவராக மாறினார். பேதுருவின் அனுபவம், "எனக்கு எப்படி?" என நமக்கு நாமே கேட்கத் தோன்றுகிறது. **"இந்த ஈஸ்தரில் எனது வாழ்வு எவ்வாறு மாறியுள்ளது?"** "ஆண்டவர் என்னோடு பேச அல்லது மனதைத் தொட எந்த வகையில் அவரை நான் அனுமதித்துள்ளேன்? அல்லது எனது வாழ்வில் மாற்றம் ஏற்படாததற்கு காரணம் என்ன?" கிறிஸ்துவில் நாம் மீட்கப்பட்டிருக்கிறோம் என்றால் நாம் அப்படியே இருந்து விட முடியாது என கொரிந்தியருக்கு எழுதிய முதல் கடிதத்தில் புனித பவுல் கூறுகிறார். பழைய ஆடையைக் கழற்றி விட்டு, புதிய ஆடையை அணிந்து கொள்ள வேண்டும். ஈஸ்தர், நமது வாழ்வில் வித்தியாசத்தை ஏற்படுத்த வேண்டும். இல்லையென்றால், ஒவ்வொரு ஆண்டும் திருச்சபை கொண்டாடும் இந்த பெருவிழாவின் அர்த்தத்தை புரிந்து கொள்ளாதவர்களாக நாம் இருப்போம்! ✝

**வாரம் ஒரு வசனம்**

"இந்த ஈஸ்தரில் எனது வாழ்வு எவ்வாறு மாறியுள்ளது?"

INTERNAL CIRCULATION ONLY
BUL 13/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

1 ஏப்ரல் 2018

அல்லேலூயா, ஆண்டவர் உயிர்த்து விட்டார்

# Newbec

NEW WAY OF BEING CHURCH

ஈஸ்தர் ஞாயிறு

## எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்



# கிறிஸ்துவில் மீட்பு... வித்தியாசமாக இருப்பது!

Art: Johan Ludwig Lund (1777-1867), "The Resurrection of Christ" from Wikimedia Commons

## மினவுதல் மாதா தேவாலயம்

85A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே : 06-762 4468 / 763 4934 / 767 7542
தொ.நகல் : 06-767 7544
Email: : serembanvisitation@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அன்ட்ரூ கூய்

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்:*

***எதிர்நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்***

*2018 ஏப்பிரல் (சித்திரை) மாதத்தின் கருப்பொருள்:*

***கிறிஸ்துவில் மீட்கப்பட்டோம்***

***மினவுதல் தேவாலயத்தின் 170ஆம் ஆண்டை நோக்கிய பயணம்***

***( 1848 – 2018 )***

**பங்கு அலுவலக நேரம்:**

**திங்கள் - வெள்ளி:** காலை 8.30 - மாலை 5.30
**சனி :** காலை 8.30 - மாலை 7.30
**ஞாயிறு :** காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: பாஸ்கா ஞாயிறு - ஆண்டவரின் உயிர்ப்பு சனி 31-03-2018 ஞாயிறு 08-04-2018**

தி.ப 10: 34a, 37-43 தி.பா 117: 1-2, 16ab - 17, 22-23, 23-24 கொலோ 3: 1-4 யோவான் 20: 1-9

**ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே, இன்று அக்களிப்போம், அகமகிழ்வோம் (தி. பா 117) )**

| | | | |
|---|---|---|---|
| **சனி பாஸ்கா திருவிழிப்பு** | 31 | **பாஸ்கா திருவிழிப்பும் முதியோர் கிறிஸ்தவ புகுமுக வகுப்பினருக்கான திருமுழுக்கும்**<br>**5.00 மா :** பாஸ்கா திருவிழிப்பு / திருமுழுக்கு முகிபுவ (சீனம்)<br>**8.00 இரவு** : பாஸ்கா திருவிழிப்பு / திருமுழுக்கு முகிபுவ (தமிழ்)<br>**11.00 இரவு** : பாஸ்கா திருவிழிப்பு / திருமுழுக்கு முகிபுவ (ஆங்கிலம், தே.மொ) | **இரவு 8.30 மணி தித்தி (சீனம்)** |
| **உயிர்ப்பு ஞாயிறு** | 01 | 7.00 கா : பாஸ்கா உயிர்ப்பு ஞாயிறு திருப்பலி (தமிழ்)<br>9.00 கா : பாஸ்கா உயிர்ப்பு ஞாயிறு திருப்பலி (ஆங்கிலம்)<br>11.00 கா : பாஸ்கா உயிர்ப்பு ஞாயிறு திருப்பலி (சீனம்)<br>1.00 மதி : பாஸ்கா உயிர்ப்பு ஞாயிறு திருப்பலி (தே.மொ) | **குழந்தைகளுக்கான திருமுழுக்கு அனைத்து திருப்பலிகளிலும்** |
| திங்கள் | 02 | 7.00 மா திருப்பலி | |
| செவ் | 03 | 7.00 மா திருப்பலி | |
| புதன் | 04 | 7.00 மா திருப்பலி | |
| வியா | 05 | 7.00 மா திருப்பலி | |
| வெள் | 06 | கா.திருப்பலி நடைபெறாது | *மா 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (ஆ) திருமணி ஆராதனையும் திருப்பலியும் (த) - ரகாங்* |

**இறை இரக்கத்தின் ஞாயிறு**

தி.ப 4: 36-37 தி.பா 117: 2-4, 16ab, 17-18, 22-24 1 யோவான் 5: 1-6 யோவான் 20: 19-31

**ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள். ஏனெனில் அவர் நல்லவர், என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு (தி. பா 117)**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 31 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (புனித யோசேப்பு) | |
| ஞாயிறு | 01 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00ம | திருப்பலி (த) (பு. யோசேப்பு. பு. பியோ)<br>திருப்பலி (ஆ) (பு. ஸ்டனிஸ்லோஸ்)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 மணி தித்தி (சீ)<br>திருப்பலி (தே.மொ) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

இன்று திருப்பலியை சிறப்பாக வழி நடத்த உதவியவர்களுக்கும் மற்றும் திருவழிபாட்டு குழுவினருக்கு நம்முடைய மனமார்ந்த நன்றிகள்

**2018 மார்ச் (பங்குனி) மாத செய்திகள் / நிகழ்வுகள்**

i. **பங்கு காணிக்கை:**
**24/25 மார்ச் ரிம: 12,670.55 தித்தி ரிம: 91.00**

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக

ii. **இந்த வாரம் வழக்கமாக எடுக்க வேண்டிய சமூக அக்கறைப் பணிக்குழுவினரின் காணிக்கை அடுத்த வாரம் 07/08 ஏப்ரல் திருப்பலிகளில் எடுக்கப்படும்.**

iii. **ஆலயத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் எப்போதும் தூய்மையாக வைத்திருப்போம்.** ஆணி அடித்தல், பசை சுவரொட்டிகளை ஒட்டுவது போன்றவற்றைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம். ஆலயம், இறைவன் வாழும் இல்லம். எனவே அதை தூய்மையோடு பார்த்துக்கொள்வது நம்முடைய கடமை

iv. **14ஆம் பொதுத் தேர்தலுக்கு நாம் தயாராய் இருக்கிறோமோ?** 08-04-2018 - காலை 10.30 மணிக்கு மினவுதல் தேவாலய மண்டபத்தில் நடைபெறும் விசேச கூட்டத்திற்கு வந்து செவிகொடுத்து, சிந்தித்து, தயாராகுங்கள்.

v. **எஸ்.பி.எம் முடித்த மாணவர்களுக்கு:** முழு உபகார நிதியுடன் அசுந்தா மருத்துவமனையில் தாதியர் பயிற்சி பயில வாய்ப்பு: தொடர்புக்கு: 03-7872 3078 அல்லது email:haspuniza@assunta.com.my

vi. **விசேச உறுதிப் பூசுதல் வகுப்பு 2018:** (ஆங்கிலம் & தேமொழி) உரிய வயதில் உறுதிப்பூசுதல் அருளடையாளம் பெறத் தவறிய அனைவரும் இதில் கலந்து கொள்ளலாம். உங்களுடைய பெயர்களை பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும். வகுப்புகள் ஏப்ரல் 15, 2018 ஆரம்பமாக உள்ளன.

vii. **பங்கு அலுவலகம் விடுமுறை:** புனித வெள்ளி, புனித சனி, மற்றும் ஈஸ்டர் ஞாயிறு வரை மூடப்பட்டிருக்கும் (மார்ச் 30,31 & ஏப்ரல் 1, 2018)

- **ஈஸ்டர் திருவிழிப்புத் திருப்பலியில் புதிதாக திருமுழுக்குப் பெற்ற 28** சகோதர சகோதரிகளுக்கும் நம்முடைய வாழ்த்துகள். இவர்களை நம் மத்தியில் வரவேற்று தொடர்ந்து ஆதரவு அளிப்போம்.
- **தவக்கால உறைகள்:** உங்களுடைய தவக்கால காணிக்கைகள்ள பங்கு அலுவலகத்தில் அல்லது திருப்பலி நேர உண்டியலில் போடலாம்.

**170 ஆம் ஆண்டு நிறைவுக் கொண்டாட்டத்தில் எமது மினவுதல் தேவாலயம்**

- **நினைவுப் புத்தகம் & வரலாற்று ஒளிவட்டு;** இந்த தயாரிப்பில் ஈடுபடும் குழுவினர்அனைவரையும் நம் செபங்களில் ஒப்புக்கொடுப்போம்
- **WOW தண்ணீரில் நடை - 48** மணி நேர நிகழ்ச்சி - ஏப்ரல் 27-(வெள்ளி) காலை 9.00 - 29 (ஞாயிறு) காலை 9.00 வரை (மத்தேயு 14:28)

  **பேதுரு:** "ஆண்டவரே, நீர் தாம் என்றால், நானும் கடல் மீது நடந்து உம்மிடம் வர ஆணையிடும்"

  **இயேசு:** "வா" என்றார்

  பேதுருவைப் போல துணிவோடும் விசுவாசத்தோடும் அவரின் சீடர்களாக இயேசுவின் சமூகத்தினர் அனைவரையும் நாடிச் சென்றிடுவோம். ஏனென்றால், இயேசுவே "வா" என்று கட்டளையிடுகிறார்.
- **தூதுரைப் பணி மாதம் (பங்கு /அதிச அளவில்) மீட்பு சபை குருகளால் நடத்தப்படும்.** (ஏப்ரல் 16 முதல் மே 20 வரை)
- **செபமாலை மாதம், இல்லங்களிலும் /அதிச க்களிலும்**
- **மினவுதல் மாதா திருவிழா நவநாள்: மே 23 - மே 31 வரை**
- **முழு உபகார நிதியுதவியுடன் கல்வி பயில ஒரு வாய்ப்பு:**
  SKM Tahap 3 (Sijil Kemahiran Malaysia) at Kolej JSJ, Seremban.
  எஸ்.பி.எம் முடித்த மாணவர்கள் கணக்கியல் மற்றும் வரைவு திட்டப்படிப்பு
  தொடர்புக்கு: ஜோசப் ராஜன் 012-612 9732
- **உதவும் கரங்கள்:** ஏப்ரல் 2018 முதல் நம் பங்கில் இலவசமாக கூடுதல் வகுப்புகள் தொடங்க உள்ளன. பாடங்கள்: வரலாறு, (படிவம் 5) கணக்கு (படிவம் 3) இதில் அதிகமான மாணவர்கள் சேர்ந்து பயின்று பயன்பெற அழைக்கிறோம். தொடர்புக்கு: பிரான்சிஸ் ஜேசு (012-2964 336) அல்லது ஹிலரி ஸ்டாமரியா (019-654 7347)



**ஈஸ்டர் வாழ்த்துகளும் ஆசீரும் உரித்தாகுக!**
**உயிர்த்த ஆண்டவர் உங்கள் இல்லங்களை ஆசீர்வதித்து,**
**புது வாழ்வு தரும் ஆவியால் நிறைவிப்பாராக!**

